# திருச்செங்கோடு நகராட்சி

**2019 ஆம் ஆண்டு ஜூலை ம் நாள், கிழமை மாலை 4.00 மணியளவில் திருச்செங்கோடு நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களது அறையில் பின்வரும் பொருள்களைப் பற்றிக் கூட்டம் நடைபெறும்.**

**பொருள் எண்.1**

திருச்செங்கோடு நகராட்சிக்கு தனிக் குடிநீர்த் திட்டம் IUDM 2018-19 நிதியின் கீழ் ரூ. **83.85** கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (TWAD), நாமக்கல் மூலம் பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நாமக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண்.L.r.No Awss to T Gode Mpty/JD02/RWS/NKL/2019, நாள்:25.04.2019 அவர்களின் கடிதத்தில் மேற்கண்ட பணிக்கு புள்ளாகவுண்டம்பட்டியிலிருந்து **14.31** MLD குடிநீர் கொண்டு வரப்பட்டு சந்தைபேட்டையில் 15.00 இலட்சம் லிட்டர் தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டியில் சேகாரம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாகவும், மேற்படி சந்தைப்பேட்டை இடத்தில் உள்ள பழைய **10.00** இலட்சம் லிட்டர் கொள்ளவுக் கொண்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி பழுதடைந்த நிலையில் உள்ளதால் அதனை இடித்து புதிய தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிக் கட்ட இடம் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. UIDSSMT 2012-13 மற்றும் IUDM 2013-14 திட்டத்தின் கீழ் இரண்டு மேல்நிலைநீர்த்தேக்க தொட்டி கட்டப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளதாலும் மற்றும் மேற்கண்ட இடத்தில் **1989–**ம் ஆண்டு திருச்செங்கோடு – ஆலாம்பாளையம் கூட்டு குடிநீர் திட்டத்தின் (CWSS) கீழ் **10.00** இலட்சம் லிட்டர் கொள்ளவில் கட்டப்பட்டுள்ள பழைய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி தற்போது முற்றிலும் பழுதுடைந்து உபயோகம் அற்றநிலையில் உள்ளது. எனவே நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர்,சேலம் அவர்களின் அனுமதி பெற்று சந்தைப்பேட்டை இடத்தில் உள்ள பழைய **10.00** இலட்சம் லிட்டர் கொள்ளவுக் கொண்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியை இடிக்கத் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 11492/2012/இ1)

**தீர்மானம் எண்.56 (பொருள் –1) : அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான ஆவத்திப்பாளையம் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து கருமகவுண்டம்பாளையம் மற்றும் சந்தைப்பேட்டை நீருந்து நிலையத்திற்கு குடிநீர் SPB காலனி வழியாக குழாய் மூலம் எடுத்து செல்லப்பட்டு வருகிறது. இந்நிலையில் SPB காலனி பகுதியில் அமைந்துள்ள இரயில்வே பாலம் இடித்து புதியதாக கட்டப்பட உள்ளதால் குடிநீர் குழாயை வேறு இடத்தில் மாற்றி பதிக்க வேண்டி கோட்டப்பொறியாளர், தென்னக இரயில்வே சேலத்திற்கு அனுமதி வேண்டி ரூ.**2300/–** மற்றும் ரூ.**72119/–**ன் செலுத்தி அனுமதி கோரப்பட்டதில் கோட்டப்பொறியாளர், தென்னக இரயில்வே, சேலம் கடித ந.க.எண்.SA/W.372/WL/2018-96 நாள்.**02.07.2019**ன் படி ரூ.**904507.00** (ரூ.**2300**+ரூ.**72119** செலுத்தியதை சேர்த்து) செலுத்தி குடிநீர்

குழாய் மாற்றி அமைக்க அனுமதி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதால் மேற்கண்ட தொகை ரூ.904507/– செலுத்த தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
3. அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 10119/2015/இ2)

**தீர்மானம் எண்.57 (பொருள் –2) : அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 15297/2019/P1 நாள்.11.07.2019 மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்களின் அறிவுரைகளின்படி இந்நகராட்சிக்கு சொந்தமான நகராட்சிப் பள்ளிகளில் உள்ள கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை பூனரமைப்பு செய்ய வேண்டி உள்ளதால் ஆணையாளர் மற்றும் பொறியாளர் அறிவுரையின்படி நகராட்சிப்பள்ளிகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை உடனடியாக பூரனமைப்பு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட நகராட்சிப் பள்ளிகளில் மழைநீர் சேகரிப்பை பூரனமைப்பு செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.9,90,000/–க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினம்ரூ.9,90,000/–த்தை இந்நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
3. தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணியின் அவசியம் அவசரம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2998/2019/இ2)

**தீர்மானம் எண்.58 (பொருள் –3) : அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர், அவர்களின் கடிதம் ந.க.எண். 51,61/செ.ம.தொ.அ/2019 நாள்04.06.2019 மற்றும் 05.07.2019–ன்படி 2018–19–ம் ஆண்டு சாதனைகளை தொகுத்து நாளிதழில் விளம்பரம் செய்ய கேட்டுக்கொண்டதற்கிணங்க, கீழ்கண்ட நாளிதழில் விளம்பரம் செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | மாலைமலர் | ரூ.9,900/– (கால் பக்கம்) |
| 2 | தமிழ்முரசு | ரூ.7,000/– (அரை பக்கம்) |
| 3 | தினமணி | ரூ.10,000/– (முழு பக்கம்) |

**அலுவலகக் குறிப்பு:**

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
3. தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 3538/2017/இ1)

**தீர்மானம் எண்.59 (பொருள் –4) : அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான பேட்டரி மூலம் இயங்கும் தள்ளுவண்டிகளில் Warranty–ல் இல்லாத சில பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் 7 வாகனங்கள் இயக்க முடியாத சூழ்நிலையில் உள்ளது. இதனால் பொது சுகாதார பணிகள் மிகவும் பாதிப்படைந்துள்ளது. எனவே இதனை உடனடியாக சரிசெய்யக்கோரி ஆணையாளர் மற்றும் பொறியாளர் நேராய்வில் அறிவுறுத்தப்பட்டது. எனவே மேற்கண்ட பேட்டரி மூலம் இயங்கும் தள்ளுவண்டிகளை உடனடியாக சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,60,000/–க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.        /2019/இ1)

**தீர்மானம் எண்.60 (பொருள் –5) : அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான கூட்டப்பள்ளி குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அருகே அமைந்துள்ள குடிநீர் பொருட்கள் பாதுகாப்பு அறையில் (Store Room) IUDM மற்றும் UIDSSMT திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட குடிநீர் குழாய் மற்றும் இதர பொருட்கள் இருப்பதால் பொருட்கள் பாதுகாப்பு அறையில் CCTV Camera அமைக்குமாறு ஆணையாளர் மற்றும் பொறியாளர் மூலம் அறிவுறுத்தப்பட்டது. எனவே மேற்கண்ட கூட்டப்பள்ளி குடிநீர் பொருட்கள் பாதுகாப்பு அறையில் 2CCTV Camera மற்றும் Recording Equipment அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.60,000/–க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
3. தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 3115 /2019/இ1)

**தீர்மானம் எண்.61 (பொருள் –6) : அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.7</u>

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான அணிமூர் உரக்கிடங்கில் 5 குப்பை கிடங்கு மற்றும் கசடு கழிவு சுத்தகரிப்பு நிலையம் (FSTP) கட்டப்பட்டு வருவதாலும் மேலும் சமூக விரோதிகள் அடிக்கடி நகராட்சி குப்பைக்கிடங்கில் உள்ள குப்பைகளை தீப்பற்றி வைப்பதாலும் ஏற்கனவே உள்ள CCTV Camera முழுவதுமாக கண்காணிக்க இயலாததால் கூடுதலாக 10 CCTV Camera–க்கள் பொருத்த ஆணையாளர் மற்றும் பொறியாளர் மூலம் அறிவுறுத்தப்பட்டது. எனவே அணிமூர் உரக்கிடங்கில் புதியதாக 10 CCTV Camera அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,10,000/–க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
3. தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 3115 /2019/இ1)

**தீர்மானம் எண்.62 (பொருள் –7) : அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.8</u>

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 4 எட்டிமடைபுதூர் பகுதியில் புதியதாக தார்சாலை அமைக்க ரூ.14,75,000/– மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள தனி அலுவலர் தீர்மான எண்.546 நாள்.28.03.2018–ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 99/2017–18–ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு கடந்த 25.05.2018 அன்று திரு.K.செந்தில்முருகன் என்பவர்க்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் நகராட்சியில் போதிய நிதி ஆதராம் இல்லாததாலும் தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் மேற்கண்ட சாலை அமைக்க பணி எடுத்துக்கொள்ளப்பட்டது. எனவே மேற்கண்ட பணியை ரூ.6,00,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள திருத்திய மதிப்பீடிற்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

( கோப்பு எண். 1559 /2019/இ1)

**தீர்மானம் எண்.63 (பொருள் –8) : அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.9</u>**

திருச்செங்கோடு நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் தூய்மை இந்தியா திட்டம் 2018–2019ல் L.C.V. வாகனங்கள் 6 எண்ணிக்கை புதியதாக வாங்கப்பட்டு இயங்கி வருகிறது. மேற்படி வாகனங்களுக்கு முதல் தடவை ஆயில் சர்வீஸ் செய்து பில்டர்கள் மாற்றிக்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.8000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

அ. மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ. L.C.V. வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ் செய்து L.R.N. மோட்டார்ஸ் நிறுவனத்திற்கு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண்.1447/2019/இ1/எச்2)

**தீர்மானம் எண்.64 (பொருள் –9) : <u>அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் எண்.10</u>**

இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் வாகன எண்.TN28 W5257 குடிநீர் வாகனத்திற்கு தகுதி சான்று 26.07.2019 உடன் முடிவடைவதால் பராமரிப்பு பணி மேற்கொண்டு தகுதி சான்று பெற ஆகும் உத்தேச செலவினம் ரூ.94,000/–க்கு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.2482/19/இ2)

**தீர்மானம் எண்.65 (பொருள் –10) : <u>அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் எண்.11</u>**

திருச்செங்கோடு நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு வாகனம் எண்.TN28 T8967 வாகனத்திற்கு தகுதி சான்று புதுப்பித்து பழுதுகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றதின் விபரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | ஸ்ரீ வெள்ளியங்கிரி ஆட்டோ ஒர்க்ஸ்,<br>சங்ககிரி ரோடு,<br>திருச்செங்கோடு. | ரூ.86240/– |
| 2 | சுப்ரீம் கார்ஸ்,<br>பரமத்தி ரோடு,<br>நாமக்கல். | ரூ.88026/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த ஸ்ரீ வெள்ளியங்கிரி ஆட்டோ ஒர்க்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பொதுசுகாதாரப் பிரிவின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண்.2263/2019/எச்2)

**தீர்மானம் எண்.66 (பொருள் –11) : அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.12</u>

இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் வாகனம் JCB TN34 E8523 வாகனத்திற்கு இஞ்சின் ஆயில் சர்வீஸ் மற்றும் இதர பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.60000/–க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியினை TATA HITACHI நிறுவனத்திற்கு பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.5813/2018/இ2)

**தீர்மானம் எண்.67 (பொருள் –12) : அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.13</u>

திருச்செங்கோடு நகராட்சி பொறியியல்பிரிவு வாகனம் எண்.TN28 W5257 குடிநீர் பிரிவு வாகனத்திற்கு 26.07.2019 உடன் தகுதி சான்று முடிவடைவதால் தகுதி சான்று புதுப்பித்து பழுதுகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகோரியதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளதின் விரபம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | ஸ்ரீ வெள்ளியங்கிரி ஆட்டோ ஒர்க்ஸ்,<br>சங்ககிரி ரோடு, திருச்செங்கோடு. | ரூ.93045/– |
| 2 | சுப்ரீம் கார்ஸ்,<br>பரமத்தி ரோடு, நாமக்கல். | ரூ.94339/– |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள ஸ்ரீ வெள்ளியங்கிரி ஆட்டோ ஒர்க்ஸ், திருச்செங்கோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) குடிநீர்ப் பிரிவின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண்.2482/இ2/2019)

**தீர்மானம் எண்.68 (பொருள் –13) : அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.14</u>**

சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஓ.மு.எண்.13433/2018/ஜே, நாள்.17.09.2018ம் தேதிய கடிதத்தில் கொசுஒழிப்பு பணியாளர்களை (DBC Workers) ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு (Out Sourcing) முறையில் அந்தந்த நகராட்சி நிர்வாக அனுமதி வரம்புக்கு உட்பட்டு, நகராட்சி ஆணையர்களை கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை நியமித்து கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளார். அதனடிப்படையில் 93 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு (Out Sourcing) முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியாளர்களை பணியமர்த்திக் கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினத் தொகை ரூ.79.52 இலட்சத்திற்கு மன்ற முன் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண்.2677/19/எச்1)

**தீர்மானம் எண்.69 (பொருள் –14) : <u>அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது</u>.**

**<u>பொருள் எண்.15</u>**

திருச்செங்கோடு நகராட்சி 2011ஆம் வருடத்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 95335 மக்கள் தொகையும் 27611 குடியிருப்புகளையும், 5115 வர்த்தக நிறுவனங்களையும் கொண்டுள்ளது. இந்நகரம் அதிகமான கல்வி நிறுவனங்களையும் புகழ்பெற்ற அர்த்தநாரீஸ்வரர் திருக்கோவிலையும் உடையதாக இருப்பதால் இந்நகரத்திற்கு தினசரி சுமார் 10000க்கும் அதிகமானோர் வந்து செல்கின்றனர். மேற்கண்ட காரணிகளின் அடிப்படையில் தினசரி சுமார் 34.00 மெட்ரிக்டன் திடக்கழிவுகள் உருவாகிறது. மேலும் 63 சமுதாய கழிப்பிடங்களும் 3 பொதுக்கழிப்பிடங்களும் இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இந்நகராட்சியில் அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர் பணியிடங்கள் 235. அவற்றில் நாளது தேதியில் 100 துப்புரவு பணியாளர்களின் பணியிடங்கள் காலியாக உள்ளது. திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன்படி இந்நகரில் உருவாகும் அனைத்து திடக்கழிவுகளையும் முறையாக மக்கும் தன்மையுடைய கழிவுகளையும் மக்காத தன்மையுடைய கழிவுகளில் மறுசுழற்சி செய்யக் கூடிய கழிவுகளை தனியாகவும், மறு சுழற்சி செய்ய இயலாத இதர மக்காத கழிவுகளை தனியாகவும் மற்றும் வீடுகளில் உருவாகும் அபாயகரமான கழிவுகளை தனியாகவும் மின்னணு கழிவுகளை (E Waste) தனியாகவும், பிரித்து சேகரித்து அவற்றினை விஞ்ஞான முறைப்படி இறுதியாக்கம் (Disposal) செய்ய வேண்டிய கட்டாய சூழ்நிலை உள்ளது. மேற்காணும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு அரசாணை (நிலை ) எண்.101 நாள்.30.04.97 நகராட்சி நிர்வாக மண்டல குடிநீர் வழங்கல் துறையின்படி கணக்கீடு செய்யப்பட்டதில் இந்நகராட்சிக்கு மொத்தம் 453 துப்புரவு பணியாளர் பணியிடங்கள் தேவையென நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பியதில் அன்றைய தேதியில் தனியாரிடம் வெளிக்கொணர்வு (Out Sourcing) முறையில் துப்புரவு பணியாளர்காளை பெற்றுக்கொள்ள அனுமதித்த 150 பணியாளர்களை ( ந.க.எண்.4152/பி3/2017) நாள்.23.06.2017 நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம்) தவிர்த்து மேலும் 164 பணியாளர்களை வெளிக்கொணர்வு முறையில் தனியரிடம் பெற்றுக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.28369/ஜே3/2018 நாள்.04.12.2018ம் தேதியில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் 150

மற்றும் 164 மொத்தம் 314 பணியாளர்களை வெளிக்கொண்ர்வு முறையில் தனியரிடம் பெற்றுக்கொள்ள அனுமதி வழங்கப்பட்ட நிலையில் கடந்த ஜனவரி 2019 முதல் 105 துப்புரவு பணியாளர்கள் வெளிக்கொணர்வு முறையில் தனியாரிடம் பெறப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (ந.க.எண்.10838/2017/எச்1, நாள்.13.12.2018) மேலும் நாளது தேதியில் உள்ள நிரந்தர துப்புரவு பணியாளர்கள் 138 மற்றும் தனியார் பணியாளர்கள் 105 மொத்ததம் 243 பணியாளர்களைக் கொண்டு திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன்படி அனைத்து வகையான திடக்கழிவுகளையும் விஞ்ஞான முறைப்படி இறுதியாக்கம் செய்யும் பணியில் சுணக்கம் ஏற்படும் சூழ்நிலையை தவிர்க்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் தனியாரிடம் பெற்றுக்கொள்ள அனுமதித்த 314 பணியிடங்களில் தற்போது பெறப்படும் 105 பணியாளர் நீங்கலாக 213 பணியிடங்களில் நகராட்சியின் நிதி நிலையினை கருத்தில் கொண்டு 100 பணியாளர்களை தனியாரிடம் பெற்றுக்கொள்ள உரிய ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. கீழ்காணும் செலவின கணக்கீடு மற்றும் மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | 100 துப்புரவு பணியாளர்களுக்கான சம்பளம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினசரி சம்பளவிலை விகிதத்தின்படி (100x305x365) | ரூ.1,11,32,500/– |
| 2 | EPF, Employer Share 13.6% | ரூ.15,14,020/– |
| 3 | ESI Employer Share 3.25% | ரூ.3,61,806/– |
| 4 | சீருடை நபர் ஒருவருக்கு ஓராண்டிற்கு ரூ.2400/– வீதம் 100x2400 | ரூ.2,40,000/– |
| 5 | நபர் ஒருவருக்கு ஓராண்டிற்கு பாதுகாப்பு உபகரணங்கள் ரூ.3200x100 | ரூ.3,20,000/– |
| 6 | உயிரியளவு இயந்திரங்கள் மூன்று (3x10000) | ரூ.3,00,00/– |
| 7 | நிர்வாக செலவினம் 5% (சம்பள தொகை ரூ.1,11,32,500ல் 5%) | ரூ.5,56,625/– |
| 8 | மொத்தம் ஓராண்டுக்கான தோராயன செலவினம் மற்றும் மதிப்பீடு | ரூ.14154951/–<br>=ரூ.141.55 இலட்சம் |

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
3. தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.25769/19/எச்1)

**தீர்மானம் எண்.70 (பொருள் –15) : அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண்.16</u>

இந்நகராட்சியில் இயங்கி வரும் வாகன எண்.TN34 T999க்கு நான்கு டயரும் பழுது ஆகி உள்ளது. இதனை மாற்ற திருச்செங்கோடு வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம் லிமிடெட் மூலம் பெறும் தோராயமான செலவினம் ரூ.17,000/–க்கு மேற்கொள்ளவும் செலவினத்திற்கு மன்ற முன் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1) தனி அலுவலர் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
2) மேற்கண்ட பணியினை திருச்செங்கோடு வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம் லிமிடெட் நிறுவனத்தில் வாங்க தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.3538/19/இ2)

**தீர்மானம் எண்.71 (பொருள் –16) : அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.17</u>

திருச்செங்கோடு நகராட்சி பொறியியல் பிரிவு ஈப்பு வாகனம் TN28 W3234க்கு தகுதி சான்று புதுப்பித்து பழுதுகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.40000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொறியியல் பிரிவின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று திருச்செங்கோடு வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம் லிமிடெட் நிறுவனம் மூலம் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண்.2965/2019/எச்2)

**தீர்மானம் எண்.72 (பொருள் –17) : அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.18</u>

திருச்செங்கோடு நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் வாகனம் TN34 D3973 டிப்பர் வாகனத்திற்கு தகுதிசான்று புதுப்பித்து பழுதுகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.89000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதாரப் பிரிவின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும் வழங்கியமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண்.2880/2019/எச்2)

**தீர்மானம் எண்.73 (பொருள் –18) : அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.19</u>

திருச்செங்கோடு நகராட்சி பங்களா தெரு கதவு எண்.1ல் வார்டு எண்.17, திரு.ஆர்.கைலாசம் த/பெ.ராமசாமி என்பவர் செல்போன் டவர் நிறுவியதை எதிர்த்து நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து வழக்கினை உயர்நீதிமன்றத்தில் நகராட்சி சார்பில் ஆஜராகி அரசு வழக்கறிஞர் திரு.ஏழுமலை என்பவர் நடத்தி வருகிறார். எனவே, மேற்படி வழக்கிற்கு வழக்கு கட்டணம் ரூ.10,000/– மட்டும் அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.2274/2019/எப்1)

**தீர்மானம் எண்.74 (பொருள் –19) : அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.20</u>**

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான லாரிஸ்டேண்ட் உணவு விடுதியை திருமதி.ஏ.மல்லிகா என்பவர் குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்தார். இந்நிலையில் குடும்ப சூழ்நிலை காரணமாக மேற்கண்ட கடையினை நடத்த முடியாத சூழ்நிலை இருப்பதால் நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாக மனு செய்துள்ளார். மேற்கண்ட கடையின் வாடகையினை 6/2019 மாதம் வரை அன்னார் செலுத்திய வைப்புத் தொகையிலிருந்து சரி செய்து மீதம் உள்ள தொகையினை திரும்ப வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். /2019/அ1)

**தீர்மானம் எண்.75 (பொருள் –20) : அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.21</u>**

திருச்செங்கோடு நகராட்சி சின்ன தெப்பக்குளம் கீழ்தளம் கடை எண்.15க்கு வடக்குபுறம் உள்ள காலியிடத்தை திரு.எ.மாணிக்கம் என்பவர் குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்தார். மேற்கண்ட காலியிடத்தை திரு.மாணிக்கம் என்பவர் 6/2018 மாதம் நகராட்சி வசம் ஒப்படைத்து விட்டார். அன்னார் அவர்கள் நிலுவை வாடகையினை முழுவதும் செலுத்திவிட்டார். எனவே குத்தகைதாரர் செலுத்திய வைப்புத் தொகை ரூ.21,000/– திரும்ப வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.1845/2019/அ1)

**தீர்மானம் எண்.76 (பொருள் –21) : அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.22</u>**

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்துநிலையம் காத்திருப்பு கூடம் 3ஐ குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்த திரு.வேலு த/பெ.முருகன் என்பவர் வைப்புத் தொகை திரும்ப வழங்கக் கோரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண்.O.S.No.65/19ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கிற்கு நகராட்சி சார்பாக வழக்கை நடத்தி வரும் திரு.எம்.ரவி அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ.7000/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.1434/019/அ1)

**தீர்மானம் எண்.77 (பொருள் –22) : அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.23</u>

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 2ல் செங்கோடம்பாளையம் நரையன் தோட்டம் மற்றும் சண்முகபுரம் பகுதியில் பொது மக்கள் இரவு நேரங்களில் செல்ல போதிய மின் விளக்குகள் இல்லாததால் மிகவும் சிரமமாக உள்ளது. எனவே மேற்கண்ட பகுதியில் 9 இடங்களில் உள்ள மின் கம்பங்களுக்கு புதிய இணைப்பு பெற்று மின் விளக்கு அமைக்குமாறு ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்களின் நேராய்வில் அறிவுறுத்தப்பட்டது. எனவே மேற்கண்ட இடத்தில் புதியதாக தெருவிளக்குகள் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/– க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

கோப்பு எண். 1672/2019/இ2

**தீர்மானம் எண்.78 (பொருள் –23) : <u>அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.</u>**

<u>பொருள் எண்24</u>

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 2ல் செங்கோடம்பாளையம் நரையன் தோட்டம் மற்றும் காயத்திரி லைன் பகுதியில் பொது மக்கள் இரவு நேரங்களில் செல்ல போதிய மின் விளக்குகள் இல்லாததால் மிகவும் சிரமமாக உள்ளது. எனவே மேற்கண்ட பகுதியில் 8 இடங்களில் உள்ள மின் கம்பங்களுக்கு புதிய இணைப்பு பெற்று மின் விளக்கு அமைக்கவும், அதற்கு உண்டான செலவினத்தை அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களே செலவிடுவதாக தெரிவித்துள்ளனர். எனவே மேற்கண்ட இடத்தில் புதியதாக 8 தெருவிளக்குகள் அமைக்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட புதிய மின் விளக்குகள் பொருத்த ஆகும் செலவினத்தை அப்பகுதி பொது மக்கள் மூலம் மேற்கொள்ள தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 1672/2019/இ2

**தீர்மானம் எண்.79 (பொருள் –24) : <u>அலுவலகக்குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.</u>**